**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2 ஆம் நாள் செவ்வாய்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. சே.சங்கீதா, உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No.87/2021** வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | பஞ்சவர்ணம் | **வயது** | : | 62 |
| **க.பெ** | : | ஆறுமுகம் | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | பெலாசூர் | **தொழில்** | : | கூலிவேலை |

**02.09.2025 – வா.சா.1 குறுக்கு விசாரணை**

1. எனக்கு திருமணம் முடிந்து 40 வருடங்கள் இருக்குமா என்றால் இருக்கும். என்னுடைய திருமணத்திற்கு பிறகு பெலாசூர் என் கணவர் வீட்டில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் 4 ம் பிரதிவாதி அனுபவித்து வருவதாக நான் கூறியுள்ளேன் அவர் எத்தனை வருடங்களாக அனுபவித்து வருகிறார் என்றால் சுமார் 15, 16 வருடங்களாக அனுபவித்து வருகிறார். என்னுடன் பிறந்தவர்கள் நடராஜன் என்பவர் என்னுயை அண்ணன் ஆவார். மேற்படி நடராஜன் அவர்களை நான் தாவாவில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேலும் என் உடன்பிறந்த சகோதரி சந்திரா இறந்துவிட்டபடியால் அவரது வாரிசு என்று 3 ம் பிரதிவாதியை மட்டும் தாவாவில் இணைத்துள்ளேன் ஆனால் அவரின் மகன் குமரேசன் என்பவரை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

2. பாகபிரிவினை வழக்கில் அனைத்து குடும்ப உறுப்பினர்களையும் வழக்கில் சேர்க்கவேண்டும் என்றும் சேர்க்காததால் இந்த வழக்கு தவறு என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் என்னுடைய தகப்பனார் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். என் தந்தை உயிருடன் இருக்கும்போது அவரின் வாரிசுகளுக்கு சொத்துக்களை பாகம் எழுதிவைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துவிட்டார் என்றால் சரிதான். வாதி பஞ்சவர்ணம் 1 மற்றும் 2 பிரதிவாதிக்கும் கிடைத்த சொத்துக்களை, 1 ம் மற்றும் 2 ம் பிரதிவாதிகள் அவர்களின் பாகத்தை 4 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான்.

3. அதேபோன்று என்னுடைய பாகத்தை என் அண்ணன் 4 ம் பிரதிவாதிக்கு ரூ.50000 பெற்றுக்கொண்டு அவருக்கு விற்றுவிட்டேன் என்றால் சரியல்ல. ஆகையால் தான் 4 ம் பிரதிவாதி தாவாசொத்தை அனுபவித்துவருகிறார் என்றால் அவர் அனுபவித்து வருகிறார் ஆனால் நான் கிரையம் கொடுக்கவில்லை. வழக்கு சொத்துக்கள் ஏற்கனவே பாகம் பிரிக்கபட்டதால் நான் உரிமை விளம்புகை மட்டும் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தாவா மற்றும் முதல்விசாரணையில் தாவா சொத்துக்களை நான் கூட்டாக அனுபவித்துவருகிறேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கூட்டாக

அனுபவித்து வரும் சொத்துக்களை நான் பாகபிரிவினை கோரமுடியாது என்றால் சரியல்ல. பாகபிரிவினை வழக்கில் சேர்க்கவேண்டியவர்களை சேர்க்காமல் விட்டது தவறு என்றால் எனக்கு தெரியாது. ஆகையால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-Tmt.B.Salma,
District Munsif,
Polur.